வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 14.10.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 287 பக்கங்கள் : 08

# மக்களின் நாடித்துடிப்பை அறிய மார்ச்சில் மாகாண சபை தேர்தல்

## நடத்துவதற்கு அநுர அரசு திட்டம்

கொழும்பு, ஒக். 14

**நீண்ட இழுபறியில் உள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச்சில் நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

எல்லை நிர்ணய பிரச்னைக்குத் தீர்வு கண்ட பின்னர் அடுத்த வருடம் நடுப்பகுதியில் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், அந்தப் பணியை விரைவுபடுத்தி தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தற்போது திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய மார்ச் இறுதி வாரத்தில் தேர்தல் நடத்தப்படக்கூடும் எனவும், தேர்தல் திகதி பற்றிய முடிவை தேர்தல் ஆணைக்குழுவே எடுக்கும் எனவும் அறியமுடிகின்றது.

அரசாங்கம் தொடர்பாக விமர்சனங்கள் இருந்தாலும், அரசாங்கத்தை விட எதிர்க்கட்சிகளுக்கு அதிக நற்பெயர் கிட்டவில்லை என்பது அரசாங்கத்தின் மதிப்பீடு.

அதனால் அதை உறுதிப்படுத்துவதற்கான கருத்துக் கணிப்பாக இந்தத் தேர்தலை பயன்படுத்த அரசாங்கம் திட்டமிடுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் முன்வைக்கப்பட்ட திட்டங்களின்படி, அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் அரசாங்கம் மிகவும் சிக்கலான, கடுமையான முடிவுகளை செயல்படுத்த வேண்டியுள்ளது.

முக்கியமாக அரசாங்கம் பல அரசாங்க நிறுவனங்களை தனியார்

07

# வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்று முதல் ஆசிரியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

சுற்றறிக்கைக்கு ஏற்ப அதை ஏற்று வெளி மாவட்டங்களில் சேவை செய்ய சென்ற எம்மை தேவை கருதிய சேவை இடமாற்றம் என்ற பெயரில் திட்டமிட்டு பழி வாங்குவதை ஏற்க முடியாதெனக் கூறி போராட்டத்தை முன்னெடுத்துள்ள ஆசிரியர்கள், தமக்கு நியாயம். கிடைக்கும் வரை இன்று காலை 8 மணிமுதல் வடக்கின் ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட வுள்ளதாக அறிவித்துள்ளனர்.

07

# இலங்கை-சீன பிரதமர்கள் பேச்சு

கொழும்பு, ஒக். 14

பிரதமர் ஹரிணி அமரசூரிய, சீனப் பிரதமர் லி கியாங்குடன் பீஜிங்கில் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான பெண்கள் தொடர்பான உலகத் தலைவர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கலாசாரம் மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை

07

# மன்னாரில் சட்டவிரோதமான கனிய மணல் அகழ்வுக்கு எதிராக அடிப்படை உரிமை மனு

## பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் தீர்மானம்

கொழும்பு, ஒக். 14

மன்னார் தீவில் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் கனிய மணல் அகழ்வைத் தடுத்து உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, குறித்த மனுவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுற்றாடல் நீதிக்கான மையம் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் சந்தியாகோ மார்க்கஸ்

07

# சங்குப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் உயிருடன் எரிக்கப்பட்டு கடலில் வீசப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக். 14

பூநகரி சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் கரையொதுங்கிய பெண்ணின் தலையில் பலமாக தாக்கியமைக்கான சான்றுகளும், முகத்தில் எரிய கூடிய திரவம் ஒன்றினை ஊற்றி எரியூட்டிமைக்கான சான்றுகளும் காணப்படுவதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பெண்ணொருவரின் சடலம் கரையொதுங்கி இருந்த நிலையில், குறித்த பெண் காரைநகர் பகுதியை சேர்ந்த 02 பிள்ளைகளின் தாயாரான சுரேஷ்குமார் குலதீபா என அடையாளம் காணப்பட்டார்.

யாழ். போதனா

07

# வடக்கு கல்வித் திணைக்களம் முன்னால் இலங்கை ஆசிரியர் சங்கம் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14




இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நேற்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், தற்போது உள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் பாகுபாடு மற்றும் பழிவாங்கல் காணப்படுவதுடன் தற்போதுள்ள அரசாங்கத்தின் கீழ் சில அதிகாரிகள் அவர்களின் சுயலாபத்துக்காகவும் செயற்பட்டு உள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசம் அதி கஷ்ட பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான இடம் மாற்றங்கள்

07

# மைத்திரியிடம் 5 மணி நேரம் விசாரணை!

கொழும்பு, ஒக். 14

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று காலை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவில் முன்னிலையானார்.

சுமார் ஐந்து மணி நேரம் நீடித்த வாக்கு மூலத்தை வழங்கிய பின்னர், முன்னாள் ஜனாதிபதி பிற்பகல் 2:00

07

# தையிட்டியில் மாபெரும் விழா; எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

தையிட்டி திஸ்ஸ விகாரையில் பொலிஸாரின் முழுமையான பங்களிப்புடன் நேற்று விழாவொன்று முன்னெடுக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் இடம்பெற்றது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு இன்னும்

07



# சித்துப்பாத்தி மனித புதைகுழி அகழ்வு மழையினால் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக். 14

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு அமைச்சால் நிதி வழங்கப்பட்டும் தொடர்ச்சியான மழையால் அகழ்வு தாமதிக்கப்பட்டுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வழக்கு நேற்று காலை யாழ்ப்பாணம் நீதிவான்

07

# வடமாகாண அபிவிருத்தி அலுவலர்கள் ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இடமாற்றம் வழங்கக் கோரி நேற்று தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பணியாற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட

07

# செம்மணி பகுதியில் விபத்து; உதைபந்தாட்ட நடுவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் நேற்று இடம் பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்

மோட்டார் சைக்கிளும் பேருந்தும் நேருக்கு நேர் மோதியே இவ் விபத்து சம்பவித்துள்ளது.

உடுத்துறையைப் பகுதியைச் சேர்ந்த

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சவால்கள் குறித்து இலங்கைக்கு புதிய எச்சரிக்கை!

### வறுமை பகுப்பாய்வு மையம் விடுத்தது

கொழும்பு, ஒக். 14

கடந்த காலத்தில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து இலங்கை மீண்டு வருகிறது. எனினும் துணிச்சலான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால், உலகளாவிய நிலையற்ற காரணிகளின் அடிப்படையில், இலங்கை, குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கவேண்டியேற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஓ.டி.ஐ. குளோபல் மற்றும் வறுமை பகுப்பாய்வு மையத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையின் உருமாறும் பொருளாதார வளர்ச்சியை 2025 முதல் 2030 நிலைநிறுத்துதல் என்ற தலைப்பிலான அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி, மத்திய வங்கியின் தற்போதைய உதவி ஆளுநர் சந்திரநாத் அமரசேகர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் யெவெட் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் சிரிமல் அபேரத்ன ஆகியோர் அடங்கிய ஒரு சுயாதீன ஆராய்ச்சி குழுவினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை தற்போது ஒரு முக்கியமான கட்டத்தில் இருப்பதுடன், தற்போதுள்ள பேரியல் பொருளாதார உறுதிப்படுத்தலைப் பராமரிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகளைச் செயற்படுத்தவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வறுமை விகிதம் மக்கள் தொகையில் 25 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடுமையான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதிகரித்து வரும் வறுமையைத் தவிர்க்க கட்டமைப்பு சீர்திருத்தங்களை அவசரமாகச் செயற்படுத்துவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே வர்த்தகப் போரின் அபாயங்களுடனும், இருண்ட உலகளாவிய பொருளாதாரக் கண்ணோட்டத்துடனும் போராடி வரும் இலங்கைக்கு, கடனால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தில் இது குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த சூழ்நிலையில், பொருளாதார வளர்ச்சி சுமார் 3 வீதமாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கிறது.

எனினும், மறுசீரமைப்புகள் இல்லையெனில், ஏற்கனவே உயர்ந்த வறுமை நிலைகள் மேலும் உயரக்கூடும் என்றும் அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் தொடங்கிய சர்வதேச நாணய நிதிய திட்டத்தை ஆரம்பிப்பதற்கும், மிகவும் தேவையான கொள்கை நிலைத்தன்மைக்கு அடிப்படையை வழங்கும் கடன் மறுசீரமைப்பு பேச்சுகளை நிறைவு செய்வதற்கும் தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பாராட்டுக்குரியது என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## போதைப்பொருளுடன் ஒருவர் உடையார்கட்டு பகுதியில் கைது

முல்லைத்தீவு, ஒக். 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மூங்கிலாறு வடக்கு பகுதியில் 108 கிராம் ஐஸ் போதைப்பொருளை தனது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 23 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரவித்தனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடையார்கட்டு பகுதியில் அமைந்துள்ள குறித்த நபரின் வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டபோது விற்பனைக்காக வைத்திருந்த ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் இதற்கு முன்னரும் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு அழிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## "இன்னொரு மொழியை கற்பதன் ஊடாக எமது சேவையை வினைத்திறனாக்கலாம்"

யாழ்ப்பாணம், ஒக். 14

நாம் இன்னொரு மொழியை கற்பதன் ஊடாக எமது சேவையை வினைத்திறனாக்குவதுடன் மாத்திரமல்லாது தொடர்பாடல் இடைவெளியையும் குறைத்துக்கொள்ள முடியும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள டிப்ளோமா கற்கைநெறியின் பட்டமளிப்பு விழாவில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எல்லாவற்றுக்கும் மொழி முக்கியம். தாய் மொழியான தமிழ் மொழிக்கு மேலதிகமாக நாங்கள் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தை கற்றிருப்பது எங்களுக்கு எப்போதுமே கைகொடுக்கும். ஏனைய மொழிகளை அறிந்திருந்தால் சிறப்பாக பணியாற்ற முடியும்.

யாழ்ப்பாணத்தில் ஹிந்தி மொழி கற்பிக்கப்பட்டபோது சிலர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்கள். நாங்கள் இன்னொரு மொழியை அறிந்திருப்பதில் தவறில்லை. எங்களை நாங்கள் வளர்த்துக் கொள்வதற்கு பிற மொழியை அறிந்திருப்பது உதவும்.

நாங்கள் எங்கள் கலாசாரத்தை, பண்பாட்டை, பிரச்னையை மற்றையவர்களுக்குச் சொல்லவேண்டுமானால் அவர்களுடைய மொழியை அறிந்திருப்பது அவசியம். தொடர்பாடலுக்கு இலகுவாக இருக்கும் - என்றார். (அ)

## சண்டிலிப்பாயில் அதிகாலை வன்முறைக்குழு அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஒக். 14

முகமூடி அணிந்த நான்கு பேர் கொண்ட அடையாளம் தெரியாத குழு ஒன்று நேற்று அதிகாலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்குப் பகுதி யில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து அட்டகாசம் செய்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த குழு, வீட்டின் முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கு மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தது. அதேஇடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் எடுத்து வீட்டிலிருந்து எடுத்துச் சென்று சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள மல்லாகம் வீதி, மாகியப்பிட்டி சந்தியில் வீதியின் நடுவில் வைத்து தீயிட்டது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வீரமணி ஐயர் நினைவரங்கம் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 14

மகாவித்துவான் ம.த.ந. வீரமணி ஐயர் நினைவரங்கம் இன்று செவ்வாய் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடப் பீடாதிபதி றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

இதன்போது, கலாசாலையில் உள்ள வீரமணி ஐயர் திருவுருவ சிலைக்கான வழிபாடுகளும் நடைபெறும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-05)

## சட்டவிரோத மணலுடன் வந்த ஹன்ரர் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது!

யாழ்ப்பாணம், ஒக். 14

அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றிக் கொண்டிருந்த சிறிய ரக ஹன்ரர் வாகனத்தை நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாண பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அரியாலை பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெறுவதாக யாழ்ப்பாண பிரதான பொலிஸ் பரிசோதகர் பாலித்த செனவிரட்னவுக்கு தகவல் கிடைத்தது.

அவரது பணிப்புரைக்கு அமைவாக குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் இலக்கத்தகடற்று மணல் ஏற்றிக்கொண்டிருந்த குறித்த வாகனத்தை கைப்பற்றினர்.

சம்பவத்தில் வரும் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# செம்மணி மனித புதைகுழி அகழ்வு திட்டமிட்டே தாமதிக்கப்படுகின்றது!

### ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 14

செம்மணி மனிதப் புதைகுழிகளை அகழ்வதற்கு தேவையான நிதி மூலத்தைக் கண்டறிவதோ, போதிய நிதியை ஒதுக்குவதோ தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இயலாத ஒன்றல்ல நிதியை ஒரேயடியாக விடுவிப்பதும் இயலாத ஒன்றல்ல. ஆனால், அரசாங்கம் நிதியை கால இழுத்தடிப்புகளுக்குப் பிறகு, கட்டம் கட்டமாகவே விடுவித்து வருகிறது.

செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மிகப்பெரும் எண்ணிக்கையில் எலும்புக்கூடுகள் ஒரேயடியாக வெளிப்படுவதை இந்த அரசாங்கம் விரும்பவில்லை, அவ்வாறு வெளிப்படுவது, படைத் தரப்பை ஒருபோதும் தண்டிக்க விரும்பாத தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். இதனாலேயே, நிதியைக் காரணம் காட்டி செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு திட்டமிட்டே தாமதிக்கப்படுகிறது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அங்கு, அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

செம்மணியில் கிருஷாந்தி கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவம் அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதால் தவிர்க்க முடியாமல் விசாரணைகளை முன்னெடுத்தது. இவ்வழக்கில் இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ஷ சாட்சியமளித்தபோது தங்களால் 400பேர் வரையில் கொல்லப்பட்டதாகவும், அவர்களின் புதைகுழிகளைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், குற்றவாளி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய போதும் புதைகுழிகளைத் தொடர்ந்து அகழ்வதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. அதற்குவேண்டிய போதுமான அழுத்தங்களை எமது தலைமைகளும் அரசாங்கத்துக்கு கொடுக்கவில்லை. இப்போது, சித்துப்பாத்தி மயானத்தில் கட்டுமான பணிகளுக்காக அகழப்பட்ட இடத்தில் தற்செயலாக வெளிப்பட்ட எலும்புக்கூடே இதுவரையில் இருநூறுகளுக்கும் அதிகமான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஜனநாயக ரீதியில் முன்னெடுப்பதற்கான கதவுகளை முள்ளிவாய்க்கால் பேரவலம் திறந்து விட்டிருந்தது. ஆனால், அவற்றைத் தமிழ்த் தலைமைகள் கண்டுகொள்ளாமல் இலங்கை அரசாங்கத்துக்குச் சர்வதேச அரங்கில் பிணையெடுத்துக் கொடுக்கும் வேலைகளிலேயே ஈடுபட்டன. இப்போது, இனவழிப்பின் சாட்சியங்களாக செம்மணி புதைகுழிகளில் இருந்து இருநூறுக்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் எழுந்து நிற்கின்றன. தமிழின அழிப்பு நிகழ்ந்தது என்பதற்கான சாட்சிகள் பலர் இன்னமும் உள்ளனர். அவர்களால் பயத்தின் காரணமாக தங்களை வெளிப்படுத்த இயலவில்லை. ஆனால், உயிருள்ள அந்த சாட்சியங்களை விட உயிர் இல்லாத எலும்புக்கூடுகள் வலுவான சாட்சியங்களாக இன்று எழுந்து நிற்கின்றன. காலம் எங்களுக்குத் தந்திருக்கும் இந்த வாய்ப்பையாவது எமது தமிழ்த் தலைமைகள் இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும் - என்றார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.10.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது அவர்களின் பிரச்னையா?

ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு விடயங்கள் விளங்கவில்லையா? அதனால்தான் இப்போதும் உள்நாட்டு பொறிமுறை பற்றிப் பேசுகின்றனரா? அதுதான், இப்போதும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தொடர்பில் வலியுறுத்தப்படுகிறதா? இப்போதும் அப்பாவித்தனமாக சிந்தித்துக் கொண்டிருக்கும் - அப்பாவித்தனமான அரசியல் தரப்புகளும் அரசியல் சிந்தனையாளர்கள் என்போரும் இருக்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக தமிழ்ச் சூழலில் அவ்வாறான அப்பாவித்தனமானவர்களே அறிவாளிகளாகவும் ஆய்வாளர்களாகவும் கொண்டாடப்படும் நிலைமை நீடிப்பதுதான் கவலைக்கு உரியது.

இந்த உலக அரங்கில் எந்தவொரு விடயமும் அறியாமல் நிகழ்வதில்லை. அனைத்துமே அதிகார சக்திகளின் நலன்களால் நிறுத்துப் பார்க்கப்பட்டே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இந்த முடிவுகளில் பெரும்பாலும் நீதி, நியாயங்களை கொன்றுதான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஏனெனில், மற்றவர்களுக்கான நீதி என்பது, அவர்களுடைய நலன்களுக்கான தராசில் நிறுத்துப் பார்க்கப்படும் தகுதியைப் பெறுவதில்லை.

ஒருவேளை, நலன்களுக்குத் தேவைப்பட்டால் நீதி பற்றியும் அவர்கள் பிரஸ்தாபிக்கக்கூடும். இந்த அதிகாரத்திற்கான கொடூர சதுரங்க ஆட்டத்தில் சாதாரணமானவர்கள் பார்வையாளர்கள் மட்டும்தான். இதற்கு அண்மையில், காஸாவில் இடம்பெற்ற விடயங்களும் இதன்போது, உலகால் என்ன செய்ய முடிந்தது என்பதையும் கவனத்தில் கொண்டால், குழம்புவதற்கு எதுவுமில்லை.

ஆனால், சர்வதேச அரசியலில் அரிச்சுவடியைக்கூட தமிழர் தரப்புகள் இன்னும் அறிந்துகொள்ளவில்லையா? தமிழர் அரசியல் மிதவாதத்திலிருந்து ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த காலத்திலிருந்து ஏழு தசாப்தத்துக்கும் மேலான அரசியல் அனுபவம் தமிழரிடம் உண்டு. ஆனாலும் இப்போதும்கூட, பிராந்திய மற்றும் சர்வதேச அரசியலைப் புரிந்துகொள்ளும் நிலையில் தமிழ் படித்தோர் இல்லை. அனைத்தையும் மேலோட்டமாகவும் உணர்ச்சிவசமாகவும் அணுகும் போக்கே இப்போதும் தமிழர் அரசியலில் மேலாதிக்கம் செலுத்துகிறது. இந்தப் பின்னணியில்தான், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இப்போதும், எங்களுடைய பிரச்னைகள் விளங்கவில்லையா? ஐக்கிய நாடுகள் சபை எங்களுடைய பிரச்னைகளைப் புரிந்துகொள்ளவில்லையா என்னும் கேள்விகள் சாதாரணமாகக் கேட்கப்படுகின்றன. உண்மையில் பிரச்னை தமிழர் பக்கத்தில்தான் இருக்கிறது - அதாவது, அவர்களை தமிழர் தரப்புகள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

காஸாவில் இடம்பெற்ற விடயங்களும் அதற்கு எதிரான உலகளாவிய குரல்களும் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் அவை எவற்றாலும் இஸ்ரேலை கட்டுப்படுத்த முடியாததை உலகளாவிய அரசியல் சூழலும் எதை உணர்த்துகிறது? அனைத்துமே அதிகார சக்திகளின் நலன்களால்தான் தீர்மானிக்கப்படுகின்றன- அவர்களது நலன்களுக்குத் தேவையென்றால், அதனை நீதியென்றும் அவசியமென்றும் அவர்கள் சொல்லத் தயங்கமாட்டார்கள். அதேவேளை, அவர்களுடைய நலன்களுக்குத் தேவையில்லை என்றால், அதனை சாதாரணமாகத் தூக்கி வீசி விட்டுச் செல்வதற்கும் அவர்கள் சிறிதும் தயங்கமட்டார்கள். இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை போர் குற்றவாளியாக அடையாளம் கண்ட அமெரிக்காதான் மறுபுறம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளையும் கறுப்புப் பட்டியலில் இட்டிருக்கிறது. இலங்கை போன்ற நாடுகளை மனித உரிமைகள் அடிப்படையில் நோக்கும் அமெரிக்காவோ இஸ்ரேல் என்று வருகின்றபோது தலைகீழாக செயல்படுகிறது. ஏன்? ஏனென்றால், இதுதான் நாம் சுட்டிக்காட்டும் நலன்சார் சதுரங்க ஆட்டம். இந்த ஆட்டத்தை அவர்கள் ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை. இதனைப் புரிந்துகொள்ள வேண்டியது எங்களுடைய பொறுப்பே தவிர, அவர்களுடையது அல்ல.

## பெங்களூர் விமான நிலையத்தில் இலங்கையர் உட்பட மூவர் கைது!

சென்னை, ஒக். 14

இந்தியாவின் பெங்களூர் கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் 45.4 கிலோ உயர்ரக கஞ்சா மற்றும் 6 கிலோ சைலோசைபின் காளான்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு, இலங்கையர் ஒருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து விமானம் மூலம் உயர்ரக கஞ்சா, மஜிக் காளான் என்னும் போதை காளான் ஆகியவை கடத்தி வரப்படுவதாக பெங்களூர் கெம்பேகவுடா விமான நிலையத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி, தீவிரமாக சோதனை நடத்தப்பட்டு வந்த நிலையில் இலங்கை விமானத்தில் வந்த சந்தேகத்துக்குரிய இருவரை பிடித்து அதிகாரிகள் விசாரணை செய்தனர்.

அவர்கள் வைத்திருந்த உணவுப் பொருள் ரின்களில் போதைப்பொருட்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து அவர்கள் 2 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான 2 பேரும் தங்களது நண்பர் ஒருவர் மற்றொரு விமானத்தில் போதைப்பொருள் கடத்தி வருவதாக அதிகாரிகளிடம் தெரிவித்தனர். இதனை அடுத்து மற்றொரு விமானத்தில் வந்த பயணி, அவரது உடைமைகளை அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள். அந்த பயணியிடமும் போதைப்பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடம் இருந்து 14 கிலோ உயர்ரக கஞ்சா மற்றும் 2 கிலோ சைலோசைபின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கைதான 3 பேரிடமும் இருந்து கைப்பற்றப்பட்ட ஒட்டுமொத்த போதைப் பொருட்களின் இந்திய மதிப்பு 50 கோடி ரூபாய் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## கழிப்பறை குழி வெடித்து ஒருவர் பலி!

கொழும்பு, ஒக். 14

ஹபராதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசந்திய, பிலானாவில் உள்ள வீடொன்றில் கழிப்பறை குழி வெடித்துச் சிதறியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தன்று உயிரிழந்த நபர் கார்பைட்டை போட்டு குழியிலிருந்து வாயுவை அகற்ற முயன்றுள்ளார். இதன்போது, குழி வெடித்து சிதறியதில் அவர் படுகாயமடைந்தார்.

அயலவர்கள் அவரை காலி தேசிய வைத்தியசா லையில் சேர்ப்பித்தனர். அவரை பரிசோதித்த மருத் துவர்கள் அவர் ஏற்கனவவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வாஞ்சாவலை, பிலானாவைச் சேர்ந்த 56 வயதுடையவர் ஆவார்.

ஹபராதுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## "பெண்களின் உரிமைகள், சமத்துவத்துக்கான எமது உறுதிப்பாட்டை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்"

பீஜிங், ஒக். 14

பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை முன்னேற்றுவதற்கும், சமத்துவம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளைச் செயல்பாட்டு ரீதியாகக் கடைப்பிடிப்பதற்குமான தனது உறுதிப்பாட்டை இலங்கை மீண்டும் வலியுறுத்துவதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் அமைந்துள்ள சீன தேசிய மாநாட்டு மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற உலகத் தலைவர்களின் பெண்கள் பற்றிய மாநாடு 2025 இன் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டபோதே பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் வரவேற்புரையை அடுத்து, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் உரை உட்பட, அரச மற்றும் அரசாங்கத் தலைவர்கள் தமது உரைகளை முன்வைத்தனர்.

மன்றத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், 1995 ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற பெண்கள் பற்றிய உலக மாநாட்டினதும், பாலின சமத்துவத்திற்கான ஒரு விரிவான கட்டமைப்பாகிய பீஜிங் செயல்பாட்டுத் தளத்தினதும் மரபை நினைவுகூர்ந்ததோடு, கடந்த மூன்று தசாப்தங்களில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் பற்றியும் குறிப்பிட்டார்.


குறிப்பாக, பெண் எழுத்தறிவு அதிகரிப்பு, தாய்மாரின் இறப்பு வீதம் கிட்டத்தட்டப் பாதியாகக் குறைந்திருப்பது, மற்றும் ஆயுட்கால அதிகரிப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டினார்.



அதே நேரத்தில், தொடர்ந்தும் காணப்படுகின்ற இடைவெளிகள் குறித்தும் அவர் கவனத்தைச் செலுத்தினார்.

அத்தோடு, பெண்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி என்பது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், சமூகம் மற்றும் கலாசாரம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான செயல்முறையாகும், ஆகையினால் இதற்கு நமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் – 14 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் – புரட்டாதி 28

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.31 - 09.00 |
| ராகு காலம் | : | 03.00 - 04.30 |
| திதி | : | அட்டமி |




**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். சொத்துப் பிரச்னையில் நல்ல தீர்வு கிடைக்கும். புவியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தைரியமான முடிவு எடுக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**சிம்மம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். விருந்தினர் வருகை உண்டு. வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது அதிகாரிஉங்களைமதிப்பார். முயற்சிகள்பலிதமாகும்.

**துலாம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். புது நட்புமலரும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை அமையும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# வெலிக்கடை சிறையில் ஏற்பட்ட கலவரத்தால் 53 தமிழர்கள் படுகொலை செய்யப்படவில்லை

## சிங்கள எழுத்தாளர் யாழில் பரபரப்பு தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.14

1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் 53 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை சிறையில் ஏற்பட்ட கலவரம் அல்ல, சிறைக்கு வெளியில் ஒரு வாரத்துக்கு முன் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆரின்

மருமகனான இராணுவத் தளபதி திஸ்ஸ வீரதுங்கவால்

திட்டமிட்ட படுகொலை நிகழ்வு என சிங்கள எழுத்தாளரும் ஊடகவியலாளருமான நந்தன வீரரட்ண யாழில் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ். தந்தை செல்வா நினைவு அரங்கில் நடைபெற்ற கறுப்பு ஜூலையின் 7 நாட்கள் என்ற நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 40 வருடங்கள் காத்திருந்து 2013 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தீயிடல் என்ற நூலை சிங்கள மொழியில் புலனாய்வு அறிக்கையிடல் மூலம் எழுதினேன்.

இதை நான் ஏன் சிங்கள மொழியில் எழுதினேன் என்றால் யாழ்ப்பாணம் பொது நூலகம் ஏன் எரிக்கப்பட்டது? யாரால் எரிக்கப்பட்டது? என்ற உண்மை நான் புத்தகம் எழுதும் வரை பலருக்கு தெரியாது.

யாழ்ப்பாணம் தீயிடல் என்ற நூல் ஒரு மாதத்தில் பத்தாயிரம் பிரதிகள் சிங்கள மக்களிடம் விற்பனை செய்யப்பட்ட நிலையில் இன்னும் குறித்த நூலுக்கான சிங்கள வாசகர்கள் அதிகமாக கேட்கின்ற நிலையில் எங்களால் உடனடியாக அச்சிட்டு வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

தற்போது கறுப்பு ஜூலையில் ஏழு நாட்கள் என்ற நூலை

யாழ்ப்பாணத்தில் இரண்டு மொழிகளிலும் வெளியிட்டுள்ளேன். இந்த நூலில் கறுப்பு ஜூலையின் சூத்திரதாரிகள் யார்? யாருக்காக தமிழ் மக்களை கொன்றொழித்தார்கள், உண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளுக்குள் ஏற்பட்ட

முரண்பாடா கலவரத்தின் பின்னணி?, வெலிக்கடை சிறைச்சாலைக்கு தமிழ் இளைஞர்கள் எவ்வாறு கொண்டுவரப்பட்டார்கள் போன்ற பல புலனாய்வு தகவல்களை ஆதாரத்துடன் எழுதியுள்ளேன்.

அநேகமானவர்கள் இன்றும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் கைதிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடு தான் குட்டிமணி உட்பட 53 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமைக்கு காரணம் என.

உண்மை அது அல்ல. நான் அக்காலப் பகுதியில் சிறைச்சாலையின் பிரதம சிறை காவலரை நேரடியாக வாக்குமூலம் பெற்றேன். 1983 யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் 13 இராணுவத்தினர் கொல்லப் பட்ட நிலையில் அவர்களின் உடலை கொழும்புக்கு எடுத் துச் சென்று கலவரத்துக்கான திட்டத்தை ஜே. ஆர். வகுத்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் குட்டிமணி உட்பட 53 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமை சிறையில் ஏற்பட்ட கலவரம் அல்ல. ஒரு வாரத்துக்கு முன்னதாக நன்கு திட்டமிட்ட கொலை முயற்சி- என்றார். (எ)

# மதுபானம் அருந்திக்கொண்டு வாகனம் செலுத்தும் சாரதி

யாழ்ப்பாணம், ஒக். 14

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்றின் சாரதி மதுபானம் அருந்திக்கொண்டு வாகனம் செலுத்தும் காணொலி வெளியாகியுள்ளது.

யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த குறித்த வாகனத்தின் சாரதியே இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான, அவசர சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் குறித்த வாகனத்தில் வைத்து, வாகனத்தின் சாரதி மற்றும் மேலுமொருவர் இணைந்து மதுபானம் அருந்தியுள்ளனர்.

இதனை அவதானித்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் காணொலி பதிவு செய்துள்ளதுடன், இதுதொடர்பில் குறித்த வாகன சாரதியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும், இது அம்புலன்ஸ் அல்ல என்றும் இதனை நீங்கள் ஏன் கேட்கின்றீர்கள் என்றும் காணொலி பதிவு செய்தவரிடம் கடுமையாக கூறிவிட்டு வாகனத்தை எடுத்து பின்னால் செலுத்திச் சென்றுள்ளார்.

குறித்த வாகனத்துக்குள் மதுபான போத்தல்கள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன் வாகனத்தை செலுத்திய சாரதி மதுபானம் அருந்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சுகாதார அமைச்சின் முத்திரையுடன், அவசர சுகாதார சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் இதுபோன்ற வாகனங்களின் சாரதிகள் இவ்வாறு மது போதையில் வாகனம் செலுத்துவது, பணி நேரத்தில் மது அருந்துவது உள்ளிட்டவை பொது மக்களிடத்தில் அச்சத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தக்கூடியதாகும்.

மேலும், பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய இதுபோன்ற நடவடிக்கைகள் குறித்து உரிய தரப்பினர், சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

# வெடிகுண்டு வெடித்ததில் காயமடைந்தவர் மரணம்

கிளிநொச்சி, ஒக். 14

வெடிகுண்டை பிரித்து வெடிமருந்தை எடுக்க முயன்றபோது அது வெடித்ததில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கிளிநொச்சி - ஆனையிறவு, தட்டுவன்கொட்டியில் கடந்த மாதம் 29ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இதில், யாழ்ப்பாணம் - தென்மராட்சி, கச்சாயைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்திருந்தனர்.

இவர்களில் சோமசுந்தரம் கேதீஸ்வரன் (வயது- 50) என்பவரே சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (எ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 14

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 27 எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ் சைவப்புலவர் ச. நவநீதன் "விடையிலச் சினையிட்ட படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 42ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு , சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் நிகழ்த்துவார். சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "தேவரையே வல்கொள் படலம்" என்னும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவு வழங்குவார்.

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடிக்கப்படவுள்ள பாடசாலை நேரம்!

## போக்குவரத்திலும் மாற்றங்கள் வரும்

கொழும்பு, ஒக். 14

**வரவிருக்கும் கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் பாடசாலை நேரம் பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்படவுள்ளதால், மாணவர்களின் போக்குவரத்துக்குத் தேவையான மாற்றங்கள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து தொடர்பாக ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முதற்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மற்றொரு சுற்று கலந்துரையாடல் நடைபெறும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நலகா கலுவேவா குறிப்பிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் "இது குறித்த தேவையான தகவல்களை நாங்கள் ஏற்கனவே வழங்கியுள்ளோம். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு தற்போது நிலை மையை மீளாய்வு செய்து வருகின்றது. புதிய பாடசாலை அட்டவணை அமுலுக்கு வந்தவுடன் போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பான தேவைகளை நாங்கள் தெரிவிப்போம். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அதற்கேற்ப பதிலளிக்கும்." எனவும் அவர் குறிப்பிட்டார்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படும் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்களின் கீழ், தரம் 1 முதல் 6 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை நேரம் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மின்சார கட்டண திருத்தம் இறுதித் தீர்மானம் இன்று!

கொழும்பு, ஒக். 14

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு இன்று அறிவிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான இறுதி மின் கட்டண மாற்றம் தொடர்பான இறுதி தீர்மானம் இன்று வெளியிடப்பட உள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 6.8 வீதம் உயர்த்தும் வகையில் இலங்கை மின்சாரசபை யோசனை ஒன்றை முன்மொழிந்திருந்தது.

இந்த மாதம் முதல் டிசெம்பர் வரை, நீடிக்கும் ஆண்டின் இறுதி காலாண்டுக்காக இந்த கட்டணத் திருத்தத்தை மின்சாரசபை முன்மொழிந்திருந்தது.

இந்த முன்மொழிவைச் சார்ந்த பொது கருத்து சேகரிப்பு கடந்த செப்ரெம்பர் 18 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் தொடங்கப்பட்டு, இறுதி அமர்வு ஒக்ரோபர் 8ஆம் திகதி மேல் மாகாணத்தில் நடைபெற்றது.

அந்த கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் கருத்தில் கொண்டு, மின்சாரக் கட்டண மாற்றம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்த இறுதி தீர்மானம் இன்று அறிவிக்கப்படும்.

இந்த ஆண்டின் மூன்றாவது மின் கட்டண மாற்றத்தைச் சார்ந்த கருத்து சேகரிப்பு அமர்வுகளில் சுமார் 500 பேர் தங்களது கருத்துகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கிடையில், மின்சார சபையின் மறுசீரமைப்பு முறையாக முன்னெடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் மின்கட்டண உயர்வை தடுக்க முடியாது என இலங்கை மின்சாரசபை சுயாதீன தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது. (அ)

# கல்கிஸை நீதிமன்ற சம்பவம் பொலிஸ் அதிகாரிக்கு பிணை!

கொழும்பு, ஒக். 14

கல்கிஸை நீதிமன்ற வளாகத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், தலா ரூ.200,000 மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் பொலிஸ் கான்ஸ்டபிள் விடுவிக்கப்பட்டார்.

ஒக்ரோபர் 10 ஆம் திகதி நீதிமன்ற வளாகத்திற்குள் வாகனம் ஒன்றை நகர்த்துவது தொடர்பான தகராறின்போது ஒரு சட்டத்தரணியை தாக்கியதாக எழுந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அந்த அதிகாரி கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ள இந்த வழக்கு, சம்பவத்தின்போது அதிகாரிகள் சரியான முறையில் செயல்பட்டார்களா என்பது குறித்து பொலிஸ் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் விசாரணை உட்பட பல விசாரணைகளைத் தூண்டியுள்ளது.

இந்த சம்பவத்தின்போது மூத்த சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்கவின் நடத்தை நீதிமன்ற அவமதிப்பு என்று கூறி, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால முன்னதாக தெரிவித்தார். (அ)

# குருநாகலில் தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

கொழும்பு, ஒக். 14

குருநாகல், குடா கல்கமுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் பலத்த காயமடைந்த நபர் குருநாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் எனக் கூறப்படுகிறது.

உயிரிழந்தவர் 34 வயதான பப்போலேவெல, குடா கல்கமுவ பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது சகோதரரின் வீட்டில் மற்றொரு குழுவுடன் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும், சகோதரர் அவரை வாளால் தாக்கி கொலை செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நீர்வீழ்ச்சியிலிருந்து தவறி வீழ்ந்து இளைஞர் மரணம்!

கொழும்பு, ஒக். 14

மாத்தளை, கந்தேனுவரவில் உள்ள நலகன எல்லா நீர்வீழ்ச்சியில் நேற்று முன் தினம் மாலை தவறி விழுந்த 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வத்தேகமவைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்றிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவம் குறித்து கந்தேனுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 695.7 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு பணம் இலங்கைக்கு!

கொழும்பு, ஒக். 14

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்கள் மூலம் 695.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் இந்த காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 555.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 140.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமாக வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் பெறப்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் இது வரை வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் மூலம் இலங்கைக்கு பெறப்பட்ட வருமானம் 5 ஆயிரத்து 811.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு அதே காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 4 ஆயிரத்து 843.8 மில்லியன் டொலர்களாக இருந்த நிலையில், இந்த ஆண்டு அதே காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 967.9 மில்லியன் டொலர்களாக வளர்ச்சியடைந்துள்ளது.

மேலும், செப்ரெம்பர் மாதத்தில் சுற்றுலா வருமானமாக 182.9 மில்லியன் டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை சுற்றுலா வருமானமாக 738.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எதிர்க்கட்சி தலைமைத்துவத்தில் அதிகம் தலையிடுகின்றார் நாமல்!

கொழும்பு, ஒக். 14

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ இருந்தாலும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தில் அதிகம் தலையிடுவதாக விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த விழா ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தின்படி, எதிர்க்கட்சி, ஆட்சியை ஆதரிப்பதில்லை.

அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டதாக ஒரு கருத்தை உருவாக்கி ஆட்சியை கைப்பற்ற அவர்கள் விரும்புகின்றார்கள்.

இந்த நாட்டில் சரியான எதிர்க்கட்சி இல்லை என்பது எங்கள் வருத்தம்.

முடிந்தால் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்று சேரவேண்டும் என நான் சவால் விடுகின்றேன்.

சஜித் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், சமூகம் அவரை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை.

நாமல் ராஜபக்ஷவின் கடந்த கால செயற்பாடுகள் காரணமாக அவராலும் எதிர்கட்சித் தலைமையை பெற முடியவில்லை- என்றார். (அ)

# சட்டத்தரணி ஒருவரைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஒக். 14

கல்கிஸை பொலிஸ் தலைமையக பரிசோதகர் எச்.டி.எம். துஷார உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர் அந்தப் பதவியிலிருந்து மருத்துவ சேவைகள் பிரிவில் பொதுப் பணிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக, பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஏ.எஸ்.பி. மினுர சேனாரத்ன தெரிவித்தார்.

கல்கிஸை நீதிமன்ற வளாகத்திற்குள் சட்டத்தரணி ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில், கல்கிஸை பொலிஸ் தலைமையக பரிசோதகர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (அ)

# பொன்சேகாவுக்கு நாமல் எம்.பி. பதிலடி!

கொழும்பு, ஒக. 14

"பொன்சேகா வசம் குரல் பதிவு இருந்தால் அதனை அவர் வெளியிடட்டும்." - என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் மீதான பொன்சேகாவின் விவகாரம் மற்றும் காணொளி வெளியிடும் விவகாரம் என்பன தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

"பொன்சேகாவின் இயல்பு அது. முன்னரும் அவர் அப்படிதான். குரல் பதிவு இருந்தால் அதனை அவர் வெளியிடட்டும். அதற்குரிய உரிமை அவருக்கு உள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ, பொன்சேகாவுடன் நம்பி கதைத்திருகக்கூடும். ஆக அதனை வெளியிட்டால் தற்போது பொன்சேகாவை நம்புபவர்களின் நிலை என்னவென்று சொல்வது?"- என்றார் நாமல் ராஜபக்ஷ. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சஜித் இணைவு மிகவும் வரவேற்கத்தக்கது

## இராதாகிருஷ்ணன் சொல்கிறார்

நுவரெலியா, ஒக். 14

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது காலத்தின் கட்டாயம். இது இதற்கு முன்னரே நடந்திருக்க வேண்டும். அவ்வாறு நடந்திருந்தால் அனைவருக்கும் நன்மை பயக்கும் விடயங்கள் நடந்திருக்கும்.

எனினும், கடந்த காலங்களில் இரு தலைவர்கள் மத்தியிலும் காணப்பட்ட தலைமைத்துவம் உள்ளிட்ட சில முக்கிய விடயங்களில் விட்டுக்கொடுப்பற்ற நிலைமையால் அந்த முயற்சிகள் கைகூட முடியாது போயிருந்தன. இவ்வாறு இணைந்திருந்தால் முன்பு நடைபெற்ற பல்வேறு தேர்தலில் பல வெற்றிகரமான சம்பவங்களை சந்தித்திருக்கலாம்.

தற்போது எதிர்கால திட்டங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து இரு தரப்பினரும் இணைந்து செயல்பட வேண்டும். அதனை நாம் முழுமையாக வரவேற்பதோடு அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம். இது விரைவிலேயே நடைபெற வேண்டும் என நாங்கள் இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்.

அடுத்து வருகின்ற தேர்தல்களை கையாள்வதற்கு இவ்விரு கட்சிகளும் இணைந்து உரிய தலைமை வகித்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)



# சொறிக்கல்முனையில் யானைகள் அட்டகாசம்

நாவிதன்வெளி, ஒக். 14

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சொறிக்கல்முனை -01 கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

சொறிக்கல்முனை கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள், வீட்டை உடைத்து உணவுக்கு வைத்திருந்த நெல்லையும் சேதப்படுத்தியுள்ளன.

சம்பவ இடத்துக்கு நேற்று முன்தினம் காலை பிரதேச சபை தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஜஜின் மோஸஸ் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து வன வள திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

அறுவடை காலங்கள் நிறைவடைந்த பின்னர் கிட்டங்கி வாவியை அண்டிய நாணல் பகுதிகளில் பகல் வேளையில் கூட்டம் கூட்டமாக வரும் யானைகள் இரவு வேளைகளில் அண்மை கிராமங்களான வீரச்சோலை, வீரமுனை, சொறிக்கல்முனை, சம்மாந்துறை கிராமங்களில் புகுந்து உடைமைகளையும், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தி வருவதாகவும் இரவு வேளைகளில் அச்சத்துடனேயே கிராம மக்கள் உள்ளதாகவும் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் கூறினார். (எ-08)

# மூதூர் சந்தையில் சுகாதார சீர்கேடுகள்

## சீர்செய்யுமாறு எச்சரிக்கை

மூதூர், ஒக். 14

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதான பஸ் தரிப்பிட நிலையத்தில் பல ஆண்டுகளாக இடம்பெற்று வரும் சந்தைப் பகுதிக்கு அதிகாரிகள் சென்று பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

சுகாதார நெறிமுறைகள் மீறப்பட்டு வருவதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து, சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்றனர்.

அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, பல்வேறு சுகாதார சீர்கேடுகளை கண்டறிந்தனர்.

இந்த நிலையில், மூதூர் சந்தையை சீர்செய்ய மூதூர் பிரதேச சபைக்கு எழுத்து மூலமான மனுவை சமர்ப்பிக்க உள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மேலும், இரண்டு வாரங்களுக்குள் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், சந்தை இடம்பெறுவதை நிறுத்தும் வகையில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்தார். (எ)

இலங்கை தேயிலைக்கு உலகளவில் தங்க விருது

# உழைத்த தொழிலாளர்களுக்கு என்ன விருது கொடுக்கப்போகின்றோம்?

மட்டக்களப்பு, ஒக். 14

இலங்கை தேயிலைக்கு உலகளவில் தங்க விருது, உழைத்த தொழிலாளர்களுக்கு என்ன விருது கொடுக்கப் போகின்றோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகளவில் இலங்கையின் கறுப்புத் தேயிலைக்குத் தங்க விருது கிடைத்திருப்பதாகவும் கின்னஸ் புத்தகத்தில் அந்த சாதனை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் சமந்த வித்தியாரத்ன பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். இது பாராட்டத்தக்க விடயமாகும். இந்த வேளையில், அதற்காக உழைத்த மலையகத் தொழிலாளர்களின் நிலைமை பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. 200 ஆண்டுகளாக இந்த நாட்டின் பொருளாதாரத்துக்காக அர்ப்பணித்த மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மோசமாகவே உள்ளது.

நாட்டுக்குப் பெருமை தேடிக்கொடுத்த மலையகத் தொழிலாளர்களின் வாழ்விடம், வாழ்க்கைத்தரம், சம்பளம், அவர்களுக்கான கணிப்பு, உரிமை என்பன இன்றும் குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றன.

அவர்களால் ஏற்படுத்தப்படும் பொருளாதார அனுகூலங்களை அனுபவிக்கின்றோம், மதிக்கின்றோம். அதனை ஈட்டித் தந்த தொழிலாளர்களை அதிகார மையமும், அவர்களது பரிவாரங்களும் மிதிக்கின்றன. இப்படியான சாபக்கேட்டினால் நாட்டின் பொருளாதாரம் 2023 இல் வங்குரோத்தானது. அதில் இருந்து இன்னும் நாடும், மக்களும் மீளவில்லை.

உழைப்பவனுக்கு கஞ்சி, உறிஞ்சுகின்றவனுக்கு கனதியான படையல் என்ற அநியாயம் உள்ள வரை இந்த நாட்டில் அபிவிருத்தியை எட்ட முடியாது. இதனைத் தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாவது உணர்ந்து செயலாற்ற வேண்டும்- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)



# தேசிய மட்டத்துக்கு முன்னேறிய சாய்ந்தமருது மாணவர்கள்

சாய்ந்தமருது, ஒக். 14

கலாசார அலுவல்கள் அமைச்சால் வருடாந்தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா - 2025 மாகாண மட்டப் போட்டியில் அம்பாறை, சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு முன்னேறியுள்ளனர்.

இம்முறை மருதமுனை ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் 15இற்கும் மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் முஸ்லிம் பிரிவில் சுமார் 07 மத்திய நிலையங்கள் கலந்து கொண்டன.

இதில், கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் கோலாட்டம் கனிஷ்ட நிகழ்ச்சியில் 90 புள்ளிகளைப் பெற்று (முதலிடம்) தேசிய மட்டத்துக்குத் தெரிவாகி சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். (எ)

# மட்டக்களப்பில் நள்ளிரவில் உணவகம் எரிந்து நாசம்

மட்டக்களப்பு, ஒக். 14

மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு முன்னால் அமைந்துள்ள உணவகம் ஒன்று திடீரென தீப்பற்றியதையடுத்து உணவகத்தில் உறங்கிக்கொண்டிருந்த 7 பணியாளர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து பல மணி நேரத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது டன் கடைத் தொகுதி முற்றாக எரிந்து சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 11.00 மணியளவில் இடம்பெற்றது. இதனால், அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

குறித்த உணவகம் வழமை போல சம்பவ தினம் இரவு 09.00 மணிக்கு மூடியதுடன் அங்கு வேலை செய்துவரும் 7 பணியாளர்களும் உணவகத்தில் உறக்கத்துக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் உணவகத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக தீப்பற்றி எரிவதை ஒருவர் கண்டு கொண்ட நிலையில் தீ பிரகாசமாக எரியத் தொடங்கியதை அடுத்து அங்கு உறக்கத்தில் இருந்த ஏனைய பணியாளர்களை எழுப்பிக் கொண்டு கடையின் கதவை உடைத்து வெளியே றினர்.

அவர்கள் அங்கிருந்து வெளியேறி 5 நிமிடத்தில் கடைத்தொகுதியில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. தீச்சுவாலையையடுத்து அருகில் இருந்த வீடுகளில் இருந்தவர்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

இதனையடுத்து மாநகர சபையின் தீயணைப்புப் படை மற்றும் பொலிஸாரின் தீயணைப்புப் பிரிவினர், காத்தான்குடி நகர சபை தீயணைப்புப் படையினர் இணைந்து நள்ளிரவு 12. 30 மணிக்கு பல கட்ட போராட்டத்தின் மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும் கடைத்தொகுதி முற்றாக எரிந்து சேதமானது. இந்தத் தீ விபத்து மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்டுள்ளது என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (எ)

# காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

திருகோணமலை, ஒக். 14

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பகுதியில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தொல்லையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 02.00 மணியளவில் ஈச்சநகர் குளத்தை அண்டிய பகுதியில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானைகள், பயிர்களையும் உடைமைகளையும் சேதப்படுத்திவிட்டு சென்றதாகவும் மக்கள் கூறினர்.

குறித்த பகுதியில் உள்ள ஈச்சநகர் குளத்தின் வழியாக காட்டு யானைகள் ஊருக்குள் படையெடுக்கின்றன எனவும் யானை தடுப்பு வேலி இன்மையால் இரவில் நிம்மதியாக உறங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தென்னை, பலா, வாழை போன்ற சுமார் 15 இற்கும் மேற்பட்ட பயிரினங்களை யானைகள் துவம்சம் செய்ததாகவும் எனவே காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து அச்சமின்றி வாழக் கூடிய சூழ் நிலைகளை ஏற்படுத்தித் தருமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்துப்பாத்தி...

நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கின் பின்னர் நீதிவான் உள்ளிட்ட குழுவினர் செம்மணி சித்துப்பாத்தி மனிதபுதைகுழி பகுதியைப் பார்வையிட்டனர்.

இதன்போது அந்த இடம் ஒரு களி மண் தரையாகக் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் இந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள் வது மிகவும் சிரமமானது எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. ஆகவே இந்த வழக்கு மீண்டும் திறந்த நீதிமன்றத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் என தீர்மானிக்கபப்பட்டது.

இதேவேளை, சட்டவைத்திய அதிகாரி பிரணவன் செல்லையாவால் புதைகுழி அகழ்வுக்கு கோரப்பட்ட நிதி, நீதி அமைச்சால் அனுமதிக்கப்பட்டு அதற்கான தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

## வடக்கு ஆளுநர்...

பெயரில் மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமக்கு நியாயம் கோரி நேற்று வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து கூறிய போராட்டக்காரர்கள்,

தொடர்ந்தும் குடும்பத்தை விட்டு வெளி இடங்களில் சேவையை முன்னெடுப்பதால் ஆசிரியர்களின் குடும்பங்கள் பிரியும் நிலையும் உருவாகி வருகிறது.

மேலும் தாபன விதிக் கோவைக்கு முரணாக, இடமாற்ற மேல்முறையீட்டுச் சபை என்ற போர்வையில் பழிவாங்கும் நோக்கத்துடன் இடமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக நாம் சேவையின் தேவை கருதிய இடமாற்றச் சபையில் இருந்து வெளியேறியிருந்தோம்.

இதன் பின்னர் ஏற்கனவே 2025 ஆம் ஆண்டு சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தில் தவிர்க்கப்பட்ட ஒருவரை மீளவும் 2026 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்திலும் உள்வாங்காது பழிவாங்கும் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில், தொழில் சங்கத்தின் உறுப்பினர்கள் அவ்வாறானவர்களை மீளவும் தரவுகள் விவரங்கள் ஏதும் கைவசம் இல்லை எனக்கூறி இடமாற்றத்தில். உள்வாங்கியுள்ளனர்.

குறிப்பாக சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தில் நிபந்தனைகளுடன் வெளிமாவட்டங்களுக்கு இடமாறிச் சென்றவர்கள், தொடர்ச்சியாக 8 முதல் 10 ஆண்டுகளுக்கு மேலாக மட்டுமல்லாது சிலர் 15 ஆண்டுகளாகவும் இவ்வாறு பணியாற்றி வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது, அவ்வாறு பாதிக்கப்பட்டு வெளி மாவட்டத்தை ஒத்த வகையில் நெடுந்தீவு, மருதங்கேணி உள்ளிட்ட பகுதிகளில் இடமாற்றப்பட்டு சில மாதங்கள்கூட நிறைவுறாது சேவை செய்து வருபவர்களையும் மீண்டும் சேவையின் தேவை கருதிய இடமாற்றம் என்ற சூழ்ச்சிக்குள் வீழ்த்தி மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு 2026 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்திலும் உள்வாங்கி பழிவாங்கியுள்ளனர்.

ஆனால் குறித்த இடமாற்றங்களை நிறுத்தி சரியான தகவல்களை பெற்று, இதுவரை காலமும் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செல்லாது சலுகைகளுடன் இருப்பவர்களை அந்த பட்டியலில் உள்வாங்கி நீதியான இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருக்கின்றது

இதை வலியுறுத்தியே போராட்டத்தையும் நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

எமது போராட்டத்தின் ஒரு அங்கமாக நேற்று வடக்கின் ஆளுநரை சந்தித்து எமது நிலைமைகளை எடுத்துக் கூறி தீர்வை கோரினோம். ஆனால் அவரும் தீர்வுக்கு பதிலாக முயற்சிப்பதாக கூறியுள்ளார். இது எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. இதனால் எமது போராட்டத்தை நாம்தொடர வுள்ளோம்-என்றனர். (அ)

## செம்மணி...

செந்தமிழ் விளையாட்டுக் கழக வீரரும் சிறந்த உதைப்பந்தாட்ட நடுவருமான யூட் (வயது -27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மக்களின் ...

பல வருடங்களாக வெளி மாவட்டங்களில் பணிபுரிந்த நிலையில் இடமாற்றம் என்ற மயமாக்கவும், சிலவற்றை மூடவும், அரசு செலவினங்களை வெகுவாகக் குறைக்கவும் கட்டாயப்படுத்தப்படும்.

இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்துவது தவிர்க்க முடியாமல் இருக்கும் என்பதுடன், மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பையும் தூண்டும் என்று அரசாங்கம் கருதுகின்றது.

அதனால் மக்கள் ஆணையை நாடி பிடித்துப் பார்க்கும் வகையில் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது. (அ)

## இலங்கை - சீன...

மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதிகாரபூர்வ கடன் வழங்குநர்களுடனான சிறிலங்காவின் அண்மைய கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும், அவர் சீனப் பிரதமரிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

ஒரு முக்கிய வளர்ச்சி பங்காளியாக சீனாவின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த சிறிலங்கா பிரதமர், பாதை மற்றும் அணை முன்முயற்சியின் கீழ் நடந்து வரும் மற்றும் முன்மொழியப்பட்ட திட்டங்கள் தொடர்பான சிறிலங்காவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

## மன்னாரில் ...

அடிகளார் உள்ளிட்ட தரப்பினால் குறித்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன மற்றும் நீதியரசர் சம்பத் அபயக்கோன் ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் குறித்த அடிப்படை உரிமை மனு, நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, மனுவை எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், அதன் பணிப்பாளர் நாயகம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, சட்டமாஅதிபர் உள்ளிட்ட தரப்புகள் மனுவின் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மன்னார் தீவை அண்மித்த பகுதிகளில் கனிய மண் அகழ்வுக்காக அனுமதி பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

குறித்த பகுதியில் இலங்கைக்கே உரித்தான அதிக பெறுமதியான கனிய வளம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள், எவ்வித விலைமனு கோரல்களுமின்றி, கனிய மண் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமை சட்டவிரோத செயல் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# உலக சுகாதார அமைப்பின் தெற்கு, தென்கிழக்கு ஆசிய பிராந்திய தலைவராக சுகாதார அமைச்சர் ஜயதிஸ்ஸ!



கொழும்பு, ஒக். 14

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் 78ஆவது பிராந்திய மாநாடு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிற்கான அதன் பிராந்திய தலைவராக ஒரு வருட காலத்திற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

78வது பிராந்திய மாநாடு இலங்கையில் நேற்று திங்கட்கிழமை நாளை புதன் கிழமை வரை நடைபெறும்.

உலக சுகாதார அமைப் பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், இந்த அமர்வில் எட்டு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உலக சுகாதார அமைப்பின் தென் கிழக்கு ஆசியாவிற் கான இயக்குநர் கேத்தரின் போஹ்மே, இரண்டு நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் மற்றும் உலக சுகாதார அமைப் பின் நிபுணர்கள் மற்றும் தூதர்கள் கலந்து கொள்வார்கள். இங்கு துறைசார் நிபுணர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் ஆண்டுக்கான சுகாதார நிகழ்ச்சி நிரலை தயார்ப்படுத்துவார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த பிராந்திய நிகழ்வின் நோக்கமானது பொதுமக்களின் சுகாதார பிரச்னைகள் குறித்த திட்டங்களை ஆராய்ந்து, முந்தைய ஆண்டுகளின் முன்னேற் றத்தை மதிப்பாய்வு செய்யும் அதே வேளையில், அனைத்து மக்களின் ஆரோக் கியமான நல்வாழ்க்கையை வழங்குவதற்கான நடை முறை சாத்தியங்களை ஆராய்ந்து அதற்குரிய நடவ டிக்கைளை முன்னேடுப் பதாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மைத்திரியிடம்...

மணியளவில் ஆணைக்குழுவிலிருந்து வெளியேறினார் என தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியுடன் இணைந்த ஒரு நிறுவனத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக வாக்குமூலம் அளிக்க முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சங்குப்பிட்டியில்...

வைத்தியசாலையில் சடலம் நேற்று திங்கட்கிழமை உடற்கூராய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

அதன்போது குறித்த பெண்ணின் தலையில் பலமாக தாக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுவதுடன், முகம் உள்ளிட்ட பகுதிகளில் எரிய கூடிய திரவம் ஊற்றி எரியூட்டப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

அவரது நுரையீரலுக்குள் நீர் புகுந்தமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையின் பிரகாரம் பெண்ணின் முகத்தில் எரியூட்டிய பின்னரே அவரை நீரினுள் வீசி இருக்கவேண்டும் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை குறித்த பெண் தனது கணவருக்கு வவுனியாவில் உள்ள நண்பி ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றுக்குச் செல்வதாகக் கூறி சென்றதாகவும் , வீட்டை விட்டு அவர் செல்லும்போது சுமார் 10 பவுண் நகைகளை அணிந்திருந்ததாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண் சடலமாக மீட்கப்பட்ட வேளை அவரது சடலத்தில் நகைகள் எவையும் காணப்படவில்லை.

குறித்த கொலை சம்பவம் நகைக்காக மாத்திரம் நடைபெற்றதா ? அல்லது வேறு பின்னணிகள் உள்ளனவா என பூநகரி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தொடர்பில் தெளிவாக கூற முடியாதுள்ளதாகவும், சடலம் நீண்ட நேரம் நீரில் மிதந்தமையால் அவற்றை உறுதியாக கண்டறிய முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வட மாகாண...

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளி மாவட்ட சேவை காலத்தை நிறைவு செய்து பல ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும், சரியான பொறிமுறையின் கீழ் இதுவரை இடமாற்றம் வழங்கப்படவில்லை என தெரிவித்து இந்த தொழிற்சங்கப் போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநரை சந்திப்பதற்காக மூவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் சந்தித்து கலந்துரையாடியதோடு மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (அ)

## வடக்கு கல்வி...

சரியான முறையில் வகுக்கப்படவில்லை என்றும், அந்த இடமாற்றங்களில் பல குறைபாடுகள் உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர்.

வட மாகாணக் கல்வித் திணைகளத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள், பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை தொடர் போராட்டத்தில் தாம் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

## தையிட்டியில்...

ஓரிரு வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பொலிஸாரை பயன்படுத்தி தையிட்டியில் இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதாக தையிட்டி காணி உரிமையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய பொலிஸார், விழாவை முன்னின்று ஏற்பாடு செய்தமை விசனங்களை உருவாக்கியுள்ளது.

திஸ்ஸ விகாரையில் இடம்பெறும் முன்னெடுப்புக்களை பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் சென்று அண்மையில் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது விகாரையை மேலும் விஸ்தரிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தின் பொய்களை வெளிப்படுத்துவதற்கே இப்போராட்டத்தை மேற்கொள்வதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஊழல்வாதிகள் கலக்கத்தில்!

**அமைச்சர் சுனில் வட்டகல**



கொழும்பு, ஒக். 14

இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் ஊழல்வாதிகள் கலக்கமடைந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அரச நிதியை மோசடி செய்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷர்கள் உட்பட கடந்த கால ஊழல்வாதிகளின் ஊழல் மோசடிகள் வெளிவரும் போது பல ஊழல்வாதிகள் அச்சமடைந்துள்ளனர்.

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இதன் காரணமாகவே, ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மீது, பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இதேவேளை, ரக்பி வீரர் தாஜூதீனின் படுகொலை தொடர்பில் புதிய விடயங்கள் வெளியாகும் போது நாமல் ராஜபக்ஷ அச்சமடைந்து பொலிஸ் திணைக்களத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்.

பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்துகின்றனர்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசியல்மயப்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே ஒருசில அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படவுள்ளதால் பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீனத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது -என்றார். (அ)

# இணைய மோசடிகள் குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 14

இணைய மோசடி தொடர்பாக பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, வெளிநாடுகளில் பங்குகளில் முதலீடு செய்வதற்காகப் பெரிய தொகைகளை வழங்குவதாக வாக்குறுதி வழங்கிய இணைய மோசடி தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் பதிவாகியுள்ளன.

இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மையத்தின் தகவல் பாதுகாப்பு பொறியாளர் சாருக தமுனுபொல இதனைத் தெரிவித்தார்.

இந்த இணைய மோசடிகளின் ஊடக 10 இலட்சம் முதல் 3 கோடி வரையிலான பணம் இழக்கப்பட்டுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து அதிக அவதானம் செலுத்துவதுடன், ஏதேனும் வகையில் முதலீடுகள் குறித்த தகவல்கள் கிடைத்தால் அதன் உண்மைத் தன்மைகளை ஆராயுமாறும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையில் பங்குகளில் முதலீடு செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன.

இதனைத் தாண்டி வெளிநாடுகளில் முதலீடுகள் செய்வதாகக் கூறி ஏதேனும் அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் வந்தால் அதனை ஆராயுமாறும் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், எந்தக் காரணம் கொண்டும் தனிப்பட்ட தகவல்கள், வங்கித் தகவல்கள் உள்ளிட்ட எதனையும் யாருக்கும் வழங்கவேண்டாம் என்றும் இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மையத்தின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார். (அ)

# வடக்கு மாகாண முதல்வர் வேட்பாளர் பற்றி அவதானம் செலுத்தும் தேசிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஒக். 14

**மாகாண சபைத் தேர்தலுக்குரிய ஆரம்ப கட்ட ஏற்பாடுகளை தென்னிலங்கைப் பிரதான கட்சிகள் உள்ளக ரீதியில் முன்னெடுத்துள்ளன.**

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி, வடக்கு-கிழக்கில் களமிறங்கவுள்ள தமது கட்சியின் முதல்வர் வேட்பாளர்கள் பற்றி அவதானம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு முதல்வர் வேட்பாளரைத் தெரிவு செய்யும் பொறுப்பு அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிமல் ரத்நாயக்க அண்மையில் யாழ். வந்தபோதுகூட இது சம்பந்தமாக இராமலிங்கம் சந்திரசேகரிடம் கலந்துரையாடியுள்ளார் என அறிய முடிகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் எம். பி.க்கள் பலர், மாகாண சபைத் தேர்தலில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபைத் தேர்தல்களில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகி மாகாண சபை முதல்வர் வேட்பாளராகக் களமிறங்கத் திட்டமிட்டுள்ளனர் . இதுபற்றிக் கட்சித் தலைவருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர் என அறியமுடிகின்றது.

கடந்த பொதுத்தேர்தலில் பெருமளவான எம்.பிக்கள் தோற்கடிக்கப்பட்டதால் மாகாண சபைத் தேர்தலில் அதிகளவான முன்னாள் எம். பி.க்கள் போட்டியிடக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# பாதுகாப்பான அரசியல் சூழல் இலங்கை பெண்களுக்கு தேவை

**அமைச்சர் சாவித்திரி போல்ராஜ்**

கொழும்பு, ஒக். 14

பெண்கள் துன்புறுத்தல் மற்றும் வன்முறையில் இருந்து விடுபட்டு அச்சமின்றி அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமையை உறுதிப்படுத்த பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்துடன் இணைந்து செயல்படுவதற்கு இலங்கை தயாராக உள்ளதாக, அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

“வெறுப்பு இல்லாத விவாதத்திற்கு” என்ற கருப்பொருளின் கீழ் பார்படோஸ், பிரிட்ஜ்டவுனில் நடைபெறும் 68 ஆவது பொதுநலவாய மகளிர் பாராளுமன்ற மாநாட்டில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, அரசியலில் ஈடுபடும் பெண்களுக்குப் பாதுகாப்பான மற்றும் மரியாதைக்குரிய தளத்தை உருவாக்குவதற்காக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை விதிமுறைகளை அறிமுகப்படுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நிறுவன பாதுகாப்பு மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல் போன்றவற்றை வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கு நல்ல நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# எதிர்காலத்தில் லஞ்ச் சீற் பாவனை முற்றாக தடை!

கொழும்பு, ஒக். 14

எதிர்காலத்தில் லஞ்ச் சீற் பாவனை முற்றாகத் தடை செய்யப்படும் என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் திலக் ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மாற்றாக பிளாஸ்ரிக் அல்லாத லஞ்ச் சீற்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

நவம்பர் 1 முதல் பொலித்தீன் பைகளை இலவசமாக வழங்க முடியாது என நுகர்வோர் விவகார அதிகார சபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

இலவசமாக வழங்கப்படாத பொலித்தீன் கொள்கலன் பைகளுக்கு நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையைப் பற்றுச்சீட்டில் குறிப்பிட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அடர்த்தியான பொலித்தீன் பைகள் மற்றும் அடர்த்தி குறைந்த பொலித்தீன் பைகள் ஆகியவற்றிற்கான விலைகளும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் வட மாகாணத்தில் லஞ்ச் சீற் பதிலாக வாழை இலைகளைப் பயன்படுத்துவதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் தீர்ப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு சட்டமா அதிபர் கடிதம்

கொழும்பு, ஒக். 14

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பகுப்பாய்வு செய்யும் விரிவான கடிதம் ஒன்று ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவினால் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

361 பக்க தீர்ப்பை ஆய்வு செய்த பின்னர், சட்டமா அதிபர் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டை வசூலிப்பதற்கான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து, கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

குறிப்பாக, உயர் நீதிமன்ற தீர்ப்பில் பல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னதாக இந்த கப்பல் விபத்தால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் சேதத்திற்கு ஒரு வருடத்திற்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்குமாறு கப்பல் நிறுவனத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் அதனைக் கப்பல் நிறுவனம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பௌத்த மத அமைச்சை இழந்துள்ளனர் மக்கள்!

**சஜித் பிரேமதாஸ கூறுகிறார்**



கொழும்பு, ஒக். 14

மக்கள் பௌத்த மத அமைச்சை இழந்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தி யுள்ளார்.

கண்டி, பரிந்த அகலவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

அத்துடன், ஏனைய மதங்களுக்குத் தனியான இராஜாங்க அமைச்சுகளை ஏன் நிறுவவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

# அரிசிக்கு செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சி!

கொழும்பு, ஒக். 14

அரிசி விலையை அதிகரிக்கும் நோக்கில், அரிசிக்குச் செயற்கை பற்றாக்குறையை ஏற்படுத்தச் சிலர் முயற்சிப்பதாக விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு, அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படும் என வெளியான வதந்திகள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன், அரசாங்கம் நிர்ணயித்த விலையை விட அதிக விலைக்கு நெல் கொள்வனவு செய்த உரிமையாளர்களே, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில், அரிசிக்கான பற்றாக்குறை ஏற்படுத்துவதற்கான எந்த காரணமும் இல்லை எனவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org